# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2084 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10

*2084 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1614* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1618* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*1611-B 81438-5,403 (2018/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் நிறைவேற்று அலுவலர் தொகுதியில் உதவிப் பணிப்பாளர் III (திணைக்களத்துடனான) பதவிக்கான மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்புகள்

*இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் நிலவும் உதவிப்பணிப்பாளர் (திணைக்களத்துடனான) 11 பதவிகளை நிரப்புவதற்காக தகைமைகளை பூர்த்திசெய்துள்ள உள்ளக விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**01. ஆட்சேர்ப்புமுறை :**

*சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவில் சேவையாற்றும், இந்த அறிவிப்பில் இலக்கம் 02 பகுதியில் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்கின்ற தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களுக்கிடையில் விண்ணப்பங்களைக் கோரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சை சபையால் நடாத்தப்படும். கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக, அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கிடையில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரை ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்படும்) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு அமைவாக கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.*

**02. தேவையான தகைமைகள் :**

I. *தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி அலுவலர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்;*

II. *தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சி அலுவலர் பதவியில் பத்து ஆண்டுகள் (10) செயல் திறமுடைய சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;*

III. *முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

IV. *தகைமைகளை பெறுகின்ற திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;*

V. *ஏனைய :-*

- ❖ *இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.*
- ❖ *விண்ணப்பதாரி சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.*
- ❖ *விண்ணப்பங்கள் கோருகின்ற இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:-**

I. *இந்தசேவைக்காக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவையில் நியமனங்களுக்கு ஏதுவாக அமையும் பொது நிபந்தனைகளுக்கும், இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவில் நிலவும் உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான) பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.*

II. *இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும்.*

III. *நியமனம் ஓராண்டு பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படும். உதவிப்பணிப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 ஆண்டு காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

IV. *பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கு அமைவாக மற்றும் அதற்கு இடை நேர்விளைவான சுற்று நிருபங்களுக்கு அமைவாக பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்து 05 ஆண்டுகாலப் பகுதிக்குள் சேவைக்கு சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

V. *அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும், இந்த நியமனம் உட்படும். சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் நிறைவேற்று அலுவலர் தொகுதியில் உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான) பதவிக்கானஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதற்கு இனிவருங் காலங்களில் மேற்கொள்கின்ற திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் உட்படும்.*

**04. சம்பளஅளவுத்திட்டம்**

இப் பதவிக்கு ரூபா 47,615 - 10 × 1335 - 8 × 1630 - 17 × 2170- ரூபா1,10,895 (SL-1 2016) மாதச் சம்பளஅளவுத் திட்டம் உரித்தாகும்.(2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகும்.)

**05. கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை**

கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| தொடர் இலக்கம் | நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | உத்தேச புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக முனைப்பான தொழில்சார் அனுபவத்திற்காக**<br>I. அடிப்படை தகைமையான 10 ஆண்டு சேவைக் காலத்தின் பின்னர் வருகின்ற சேவைக் காலத்தின் பொருட்டு ஓராண்டுக்கு 05 புள்ளிகள் படி, | | 50 |
| 02 | **மேலதிக கல்வித் தகைமைகளின் பொருட்டு**<br>i. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட சம்பந்தப்பட்ட துறையில் (முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், வியாபார நிருவாகம், தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரம் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில்) | | 20 |
| | ▪ பட்டநிலைப் பின்படிப்புப் பட்டம் | 08 | |
| | ▪ பட்டநிலைப் பின்படிப்பு டிப்ளோமா | 05 | |
| | (ஆகக்கூடிய தகைமைகளின் பொருட்டுமட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | ii. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஓராண்டுக்கு குறையாத கணினி தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி கற்று பெற்றுக்கொண்ட சான்றிதழின் பொருட்டு (1500 மணித்தியாலங்களுக்கு) | 03 | |
| | அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணினி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி கற்று பெற்றுக்கொண்ட சான்றிதழின் பொருட்டு (360 -720 மணித்தியாலங்களுக்கு) | 02 | |
| | (ஆகக்கூடிய தகைமைகளின் பொருட்டுமட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | iii. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு குறையாத சிங்களம்/ தமிழ் மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறி கற்றுபெற்றுக் கொண்ட சான்றிதழின் பொருட்டு (1500 மணித்தியாலங்களுக்கு) | 02 | |
| | சான்றிதழ் பாடநெறி கற்று பெற்றுக்கொண்ட சான்றிதழின் பொருட்டு (360 -720 மணித்தியாலங்களுக்கு) | 01 | |
| | (ஆகக்கூடிய தகைமைகளின் பொருட்டு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | iv. அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் களத்துடன் தொடர்புடைய பயிற்றுவிப்புகளுக்கு ஏற்புடையதான பாடநெறி களின் பொருட்டு | 02 | |

| தொடர் இலக்கம் | நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | உத்தேச புள்ளிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **ஆக்கப்படைப்புடன் கூடிய பணிகள் மற்றும் விசேட ஆற்றல்களின் பொருட்டு** (உதாரணம்):-<br>▪ புதிய நிகழ்ச்சித்திட்டங்களின் ஆக்கப் படைப்புக்கு காட்டப்பட்டுள்ள நேரடியான பங்களிப்பு<br>▪ புதிய கருத்திட்டங்களின் பொருட்டு கருத்திட்டப் பிரேரணைகளை தயாரித்தல்<br>▪ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு பயிற்சி கைந்நூல்களின் ஆக்கப் படைப்புக்கான பங்களிப்பு (சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் கடித ஆவணங்கள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.) (ஒரு அலுவலுக்கு 05 புள்ளிகள் படி) | | 25 |
| 04 | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை** | | 05 |
| | **மொத்தம்** | | 100 |

**6. விண்ணப்பிக்கும் முறை:-**

(i) விண்ணப்பங்கள், மாதிரிப்படிவத்திற்கு அமைவாக A4 கடதாசியில் தயாரித்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ii) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, 15/A, அல்ப்ரட் இடம், கொழும்பு03" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டுமென்பதுடன், விண்ணப்பங்கள் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான) பதவி" என்று தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**7. தவறான தகவல்களை வழங்குதல்:-**

தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் அறிய வந்தால், தங்களது பரீட்சார்த்த தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவலை ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் அறியவருமாயின் அதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி இறுதித் தீர்மானம் அமையும். அதேபோன்று வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைபடி

செயலாளர்,
இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம்
மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு,

2018, யூலை 19.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின், சிறு தொழில்முயற்சி அபிவிருத்திப் பிரிவில் நிறைவேற்று அலுவலர் தொகுதியில் உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான) பதவிக்காக மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்புகள்

01. முழுப் பெயர் :----.

02. சொந்த முகவரி :----.

03. அலுவலக முகவரி :----.

04. பிறந்த திகதி :----.

05. தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :----.

06. தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி அலுவலர் பதவிக்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பான விபரங்கள் :

6.1 முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளீரா? :----.

6.2 இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளீரா? :----.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையென வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்

திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

திரு./திருமதி/செல்வி................................................,இத்திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பங்கள் கோருகின்ற திகதிக்கு உடன் முன்னரான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளார் எனவும், உடன் முன்னரான ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குள் எல்லா வேதன ஏற்றங்களையும் உழைத்து பெற்றுள்ளார் எனவும், எச்சரிக்கை தவிர்ந்த வேறு ஒழுக்காற்று தண்டனை பெறவில்லையெனவும், இலக்கம் 01 தொடக்கம் 06 வரை வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அவரின் சுய விபரக்கோவை பிரகாரம் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை).

திகதி :----.

8-384

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

### இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

1.0 நில அளவைகள் திணைக்களத்தில், வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ***பதவிப் பெயர்.***- வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பயிலுநர் தரம்)

1.2 ***பதவிக்குரிய கடமைப் பொறுப்புக்களின் தன்மை:-***

- வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப நடவடிக்கைகள், நில அளவைகள் தொடர்பான ஆரம்ப மற்றும் இறுதி நடவடிக்கைகள் மற்றும் அதற்குரிய ஆவணங்களைப் பேணல்.

2.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். சகல வெற்றிடங்களையும் அல்லது ஏதாவதொரு எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம்** :

அட்டவணை இலக்கம் - 01

| தரம் | சம்பள அளவுத்திட்டம் | ஆரம்ப மாதாந்தச் சம்பளம் |
|---|---|---|
| பயிலுநர் தரம் | இல்லை | 1 ஆவது வருடம் மாதாந்தம் ரூபா 21,532<br>2 ஆவது வருடம் மாதாந்தம் ரூபா 21,770<br>பொ.நி.சு. 03/2016 இன் அட்டவணை V ஏற்பாடுகளுக்கமைய |
| தரம் III | மாதாந்தம் ரூபா 31,040-10× 445- 11×660-10×730-10×750- ரூபா 57,550 (எம்என் 3-2016) | ரூபா 24,626 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| தரம் II | மாதாந்தம் ரூபா 31,040-10× 445-11×660-10×730 - 10×750 - ரூபா 57,550 (12 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (எம்என் 3-2016) | ரூபா 28,684 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| தரம் I | மாதாந்தம் ரூபா 31,040-10×445-11×660-10×730-10×750 - ரூபா 57,550 (23 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (எம்என் 3-2016) | ரூபா 34,506 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| விஷேட தரம் | மாதாந்தம் ரூபா 41,580-11×755-18×1,030-ரூபா 68,425 (எம்என் 7-2016) | ரூபா 32,960 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |

4.0 **பதவிக்குரிய சேவை நிபந்தனைகள்.-**

4.1 பயிலுநர் தரத்திற்காக இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட கால பயிற்சியின் இறுதியில் தியதலாவ நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் தகைமையினைப் பரீட்சிக்கும் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இலுள்ள வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

4.2 இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இலுள்ள வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் உடையதும் ஆகும் என்பதுடன் மேற்படி நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படும் தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றிற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் நீங்கள் அதற்குரிய பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

4.3 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள அரச சேவைக்கு நியமிப்பதற்கு உரிய வகையிலான பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைத் தொழில்நுட்பவியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள், தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணக் குறிப்பு மற்றும் அரசினால் அரச சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் தெரிவு செய்யப்படுபவர் கட்டுப்படுவார்.

4.4 அரச கரும மொழியல்லாத மொழி மூலம் ஒன்றினூடாக சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.5 நிரந்தர நியமனத் திகதி முதல் 05 வருட காலப்பகுதிக்குள் பொது நிருவாக சுற்று நிருப இலக்கம் 01/2014 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிருபங்கள் என்பவற்றிற்கு ஏற்ப தமது பதவிக்கு உரிய மட்டத்திலான இரண்டாவது மொழிக்கு உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் மேற்படி தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளத் தவறுமிடத்து, மேற்படி தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளும் வரை சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்படும்.

4.6 தரம் III இல் 05 வருட காலம் பூர்த்தியடையும் முன் ஆங்கில மொழி தொடர்பான க. பொ. த. (சா/தரம்) திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.7 இரண்டு வருட கால பயிற்சியினை முழுமையாக பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருட கால பயிற்சியின் பின்னர் 06 வருடங்கள் திணைக்களத்தில் பணி புரிவதாகவும், திணைக்களத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட வேண்டியதுடன், அவர் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட தினத்தின் பின்னர் பயிற்சியினை விட்டு விலகிச் சென்றாலோ அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் திணைக்களத்தில் பணிபுரியத் தவறினாலோ பயிற்சிக்காக அரசு செலவிடும் ரூபா 1,50,000 தொகையினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு செலுத்துவதாக, திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பிணையாளர்கள் இருவரினூடாக உறுதிப்படுத்தல் உடனான பிணைமுறி ஒன்றினை பயிற்சியினை ஆரம்பிக்கும் முன்னர் எழுதி கையொப்பம் இடல் வேண்டும்.

5.0 **தகைமைகள் :**

5.1(அ) ***கல்வித் தகைமைகள்:***

இணைந்த கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞான/ கணித/ தொழில்நுட்பவியல் பாடத்துறைக்கு உரிய மூன்று பாடங்களில் க. பொ. த. (உ.தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல்,

மற்றும்

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

5.2 ***உடலியல் தகைமைகள் :***

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 ஏனையவை :

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்;

(iii) ஏதேனும் ஒரு சமயப் பிரிவின் மதகுரு ஒருவராக தலைமைத்துவத்தை வகிக்கும் எந்த ஒருவரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமை பெறமாட்டார்;

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தினத்தன்று உத்தியோகத்தர் சகல தகைமைகளையும், மற்றும் உரிய வயதெல்லையினையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

6.0 **வயது**.-

6.1ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வருடங்களுக்குக் குறையாத

6.2 ஆகக்கூடிய வயதெல்லை : 30 வருடங்களைக் கடந்திராத

7.0 **பயிலுநர் தரத்திற்கு இணைத்துக்கொள்ளும் முறை**.- நில அளவையாளர் நாயகம் அவர்களினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றினதும் மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கு முறைக்கு ஏற்ப இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை ஒன்றினை பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.1 ***எழுத்துமூலப் பரீட்சை***.- பரீட்சை இரண்டு பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சை ஒன்றாகும். மேற்படி பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் கோரப்படும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடங்கள் | பெற்றுக்கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த புள்ளிகளின் சதவீதம் | நேரம் |
|---|---|---|---|
| பொது விவேகப் பரீட்சை | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 100 | 40% | 2 மணித்தியாலம் |

7.1.1 *பாடத்திட்டம் :*

I. பொது விவேகப் பரீட்சை.-
விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனைத்திறன், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலைமை மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான கேள்விகளை உள்ளடக்கியது.

II. *தொழில்நுட்பம் தொடர்பான வினாப்பத்திரம்:*

*கணிதம் :*
திரிகோண கணிதம் (சமன்பாடுகள், முக்கோண அளவைகளைத் தீர்த்தல்) புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு) நிகழ்தகவு

*பௌதீக விஞ்ஞானம் :*
ஒளி மற்றும் கண் பார்வையியல் (ஒளித்தெறிப்பு, ஒளி ஊடுருவல் : குவிவு, குழிவு ஆடிகள், திருசிய வில்லைகளின் கண்ணொளியியல் சூத்திரங்கள்)

*பல்வேறு தலைப்புக்கள் :*
புவியியல் அறிமுகம் (புவியின் வடிவம், புவியியல் பண்புகள் ஆகியன) திண்மப் பொருட்களின் கோணப் பார்வை மற்றும் ஒளிப்படங்களை பகுதிகளாக வேறாக்கல்.

7.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை***.- தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

8.0 **பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படல் :**

1. பயிலுநர் தரத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவ நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால, தொழில்நுட்பக் கலை டிப்ளோமாப்

பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் மேற்படி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததாக வழங்கப்படும் சான்றிதழினை சமர்ப்பிப்பதன் ஊடாக தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

2. பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் பயிலுநர்களுக்கு ஆகக்கூடியது 06 மாத காலமளவு தமது பயிற்சிக் காலத்தினை நீடித்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத திறந்த பயிலுநர்களின் பதவி முடிவுறுத்தப்படும்.

9.0 **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் பூர்த்தி செய்தல்**.-

9.1 மேற்படி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 செ. மீ. × 29 செ. மீ. (ஏ 4) அளவிலான தாள் ஒன்றின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை சுயமாகத் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 2 வரையான தலைப்புக்கள் 01 ஆம் பக்கத்திலும், இலக்கம் 03 தொடக்கம் 09 வரையிலான தலைப்புக்கள் 02 ஆம் பக்கத்திலும், இலக்கம் 10 தொடக்கம் 12 வரையான தலைப்புக்கள் 03 ஆம் பக்கத்திலும், உள்ளடங்குமாறு விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

9.2 தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணபத்தினைத் தயாரிக்க வேண்டியதுடன் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் சரியான முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

9.3 சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை மேற்படி மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுனம் ஒன்றின் ஊடாக பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவராயின் தனது கையொப்பத்தினை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாகவோ, அவ்வாறின்றிய விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளர் ஒருவரினால்/ பிரபல நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் சேவை பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால், அல்லது அரசாங்க நிருவாக சுற்று நிருப இலக்கம் 06/ 2006 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்திலுள்ள அரச சேவையில் நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவரினாலோ உறுதிப்படுத்தல் வேண்டும்.

**க. வே.** : பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கோரிய பரீட்சை நிலையத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்**.-

10.1 உரிய மாதிரிப்படிவத்தினை ஒத்திராத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி இல்லாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யாத குறைபாடுகளைக் கொண்டு காணப்படும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

10.2 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நில அளவையாளர் நாயகம் அவர்களினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளவதாகவோ கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

11.0 **பரீட்சைக் கட்டணங்கள்**.-பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். மேற்படி தொகையினை கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 என்ற இடத்தில் அமைந்துள்ள நில அளவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கும் அல்லது நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம்-தியதலாவ இற்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டு உள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக்கொள்ளல் வேணடும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டுக்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**:-

12.1 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2018.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நில அளவைகள் திணைக்களம்,
இல. 150, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

12.2 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டு உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவர் ஊடாகவும் அரச கூட்டுத் தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரிபவர்கள் தனது நிறுவனத் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.3 விண்ணப்பத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - திறந்த அடிப்படையில் " எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

* **க.வே**.- 2018.09.10 ஆந் திகதியின் பின்னர் நில அளவைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

13.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் ஒருவர் தகைமை அற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுவதற்கு இடையில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையினை இரத்துச் செய்வதற்கு வாய்ப்புண்டு. சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஓர் தகவல் அது பொய்யானது என அறிந்தும் சமர்ப்பித்து உள்ளமை தொடர்பாகவோ அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தினை வேண்டுமென்றே மறைத்துள்ளமை தொடர்பாகவோ அறிய வருமாயின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

14.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும் பரீட்சார்த்தி தனக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

15.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

16.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஓர் விடயம் இருப்பின், அது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்கள் தீர்மானத்தினை மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டுப்பட்டு உள்ளனர்.

பி. எம். பி. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2018, யூலை 26.

**அட்டவணை - 01**

பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் நிலைய எண்கள்

| தொடரிலக்கம் | நிலையம் | நிலைய எண்கள் |
|---|---|---|
| 01 | கொழும்பு | 01 |
| 02 | தியதலாவ | 02 |
| 03 | அநுராதபுரம் | 03 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

நில அளவைத் திணைக்களம்

**இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

Open Competitive Examination for recruitment to the Post of Mapping Technical Officer (to the Training Grade) - 2018

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் : ☐☐

(வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை இலக்கம் 01 இற்கமைய நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எதிர்பார்க்கும் நகரம் மற்றும் உரிய இலக்கம் என்பவற்றினை கூட்டினுள் குறிப்பிடவும்.)

1.0 1.1 முதல் எழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : PERERA, A. B. C.) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

1.6 2018.09.10 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

1.7 பால் (பெண்/ஆண்) : பெண் - 1 ☐
ஆண் - 2
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1.8 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : திருமணமானவர் : ☐
திருமணமாகாதவர்: ☐
(உரிய கூட்டினுள் ✓அடையாளம் இடுக.)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

3.0 3.1 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.
3.3 கிராம அலுவலர் பிரிவு :----.

4.0 கல்வித் தகைமைகள் : உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :-

4.1 க. பொ. த. (சா. தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க. பொ. த. (உ. தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.0 தொழில்சார்/ தொழில்நுட்பவியல் தகைமைகள் : (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்):-

5.1 கற்றுள்ள பட்டம்/பாடநெறி :----.

5.2 பட்டம்/பாடநெறியினைப் பயின்ற நிறுவனத்தின் பெயர் :----.

5.3 பட்டம்/பாடநெறியின் காலப்பகுதி :----.

6.0 ஏனைய தகைமைகள் :----.

..........................................

...........................................

7.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டு உள்ளீரா? (உரிய கூட்டில் √ அடையாளம் இடுக.)

ஆம் : ☐ இல்லை: ☐

7.1 "ஆம்" எனின், விபரங்களைக் குறிப்பிடுக :----.

8.0 விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரச/மாகாண அரச சேவையில் தொழில் ஒன்றில் ஈடுபட்டு விலகி இருக்கும் ஒருவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் :----.

..............................................................................

9.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்தப்பட்ட தொகை : ரூ. ----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு<br>இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை தம் வசம் வைத்துக்கொள்ளவும்) |

10.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிமொழிகின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியினை பூர்த்தி செய்யாமல் இருப்பதனால் மற்றும்/ அல்லது பிழையாகப் பூர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டத்தினை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும், இங்கு சகல பகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி உறுதிமொழி பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொருத்தமற்றவர் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளதனை நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதனை உறுதிமெழிகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டு உள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

*11. 0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :*

*இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி........................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதனையும், அவர் ........................................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும், நான் உறுதிப்படுத்துகின்றேன்.*

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*12.0 தற்போது அரச அல்லது பகுதியளவு அரச நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்களுக்காக மாத்திரம் ஏற்புடையதாகும்.*

*திணைக்கள/நிறுவனத் தலைவரின் பரிந்துரை :*

*மேற்படி விண்ணபத்தினைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி .................. அவர்கள் .................... திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............. ஆந் திகதி முதல் ................ ஆந் திகதி வரை ................. ஆக பணிபுரிவதுடன், அவருக்கு எதிராக பூர்த்திசெய்யப்படாத ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுக்கள் அறிக்கையிடப்பட்டு உள்ளது/இல்லை. அவரின் வேலை நடத்தை மற்றும் வருகை திருப்திகரமானது/திருப்திகரமற்றது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உள்ளதாகவும், மேற்படி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு உள்ளது எனவும், அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் மேற்படி திணைக்களத்தில் இருந்து/நிறுவனத்தில் இருந்து இந்த அலுவலரினை விடுவிக்க முடியும்/முடியாது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.*

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

*8-457/1*

---

**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

*நில அளவைத் திணைக்களம்*

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018**

*1.0 நில அளவைகள் திணைக்களத்தில், வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்ற திணைக்கள ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1.1 **பதவிப்பெயர்** .- வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பயிலுநர் தரம்)

1.2 **பதவிக்குரிய கடமைப் பொறுப்புக்களின் தன்மை.-**

- வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அதற்குரிய தொழில்நுட்ப நடவடிக்கைகள், நில அளவைகள் தொடர்பான ஆரம்ப மற்றும் இறுதி நடவடிக்கைகள் மற்றும் அதற்குரிய ஆவணங்களைப் பேணல்.

*2.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். சகல வெற்றிடங்களையும் அல்லது ஏதாவதொரு எண்ணிக்கையினை நிரப்பாமல் இருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.*

3.0 **சம்பளம் :**

அட்டவணை இலக்கம் - 01

| தரம் | சம்பள அளவுத்திட்டம் | ஆரம்ப மாதாந்தச் சம்பளம் |
|---|---|---|
| பயிலுநர் தரம் | இல்லை | முன்னர் வகித்த பதவிற்கு உரிய சம்பள அளவுத்திட்டம் வழங்கப்படும். |
| தரம் III | மாதாந்தம் ரூபா 31,040-10×445- 11×660-10×730-10×750- ரூபா 57,550 (எம்என் 3-2016) | ரூபா 24,626 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| தரம் II | மாதாந்தம் ரூபா 31,040 - 10 × 445-11×660-10× 730 - 10×750 - ரூபா 57,550 (12 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (எம்என் 3-2016) | ரூபா 28,684 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| தரம் I | மாதாந்தம் ரூபா 31,040-10×445-11×660-10×730-10×750 - ரூபா 57,550 (23 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (எம்என் 3-2016) | ரூபா 34,506 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |
| விஷேட தரம் | மாதாந்தம் ரூபா 41,580-11×755-18×1,030-ரூபா 68,425 (எம்என் 7-2016) | ரூபா 32,960 (பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை II ஏற்பாடுகளுக்கு அமைய) |

4.0 **பதவிக்குரிய சேவை நிபந்தனைகள் :-**

4.1 பயிலுநர் தரத்திற்காக இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட கால பயிற்சியின் இறுதியில் தியதலாவ நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் தகைமையினைப் பரீட்சிக்கும் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இலுள்ள வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

4.2 இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இலுள்ள வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியம் உடையதும் ஆகும் என்பதுடன் மேற்படி நியமனம் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள அரச சேவைக்கு நியமிப்பதற்கு உரிய வகையிலான பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள், தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணக் குறிப்பு மற்றும் அரசினால் அரச சேவை தொடர்பாக வெளியிடப்பட்டு உள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் ஏனைய கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் தெரிவு செய்யப்படுபவர் கட்டுப்படுவார்.

4.3 அரச கரும மொழியல்லாத மொழி மூலம் ஒன்றினூடாக சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியினை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.4 நிரந்தர நியமன திகதி முதல் 05 வருட காலப்பகுதிக்குள் அரசாங்க நிருவாக சுற்று நிருப இலக்கம் 01/ 2014 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிருபங்கள் என்பவற்றிற்கு ஏற்ப தமது பதவிக்கு உரிய மட்டத்திலான இரண்டாவது மொழிக்கு உரிய தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் மேற்படி தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளத் தவறுமிடத்து, மேற்படி தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளும் வரை சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்படும்.

4.5 தரம் III இல் 05 வருட காலம் பூர்த்தியடையும் முன் ஆங்கில மொழி தொடர்பான க. பொ. த. (சா/தரம்) திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4.6 இரண்டு வருட கால பயிற்சியினை முழுமையாக பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருட கால பயிற்சியின் பின்னர் 06 வருடங்கள் திணைக்களத்தில் பணி புரிவதாகவும், திணைக்களத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட வேண்டியதுடன், அவர் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட தினத்தின் பின்னர் பயிற்சியினை விட்டு விலகிச் சென்றாலோ

அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் திணைக்களத்தில் பணிபுரியத் தவறினாலோ பயிற்சிக்காக அரசு செலவிடும் ரூபா 1,50,000 தொகையினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு செலுத்துவதாக, திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பிணையாளர்கள் இருவரினூடாக உறுதிப்படுத்தல் உடனான பிணைமுறி ஒன்றினை பயிற்சியினை ஆரம்பிக்கும் முன்னர் எழுதி கையொப்பம் இடல் வேண்டும்.

5.0 **தகைமைகள் :**

5.1(அ) ***கல்வித் தகைமைகள்:***

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில் க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) ***அனுபவம்.-***

ஆரம்ப அல்லது அதிலும் உயர்வான சேவை வகை ஒன்றில் நிரந்தர திணைக்களப்படுத்தப்பட்ட பதவி ஒன்றில் உரிய துறையில் ஆகக் குறைந்தது 10 வருட கால செயலூக்கத்துக்குடனான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

5.2 ***உடலியல் தகைமைகள் :***

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 ***ஏனையவை :***

(i) நியமனம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்;

(ii) உரிய தினத்திற்கு உடன் முன்னரான அரச சேவையில் நிரந்தரமான திணைக்களப்படுத்தப்பட்ட பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 05 வருட கால செயலூக்கத்துடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் அது தொடர்பாக திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தி இருத்தல்.

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தினத்தன்று உத்தியோகத்தர் சகல தகைமைகளையும், சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு இணைத்துக்கொள்வதற்காக எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

6.0 **வயது**.- ஏற்புடையதல்ல.

7.0 **பயிலுநர் தரத்திற்கு இணைத்துக்கொள்ளும் முறை**.- நில அளவையாளர் நாயகம் அவர்களினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றினதும் மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கு முறைக்கு ஏற்ப இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை ஒன்றினை பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.1 ***எழுத்துமூலப் பரீட்சை***.- பரீட்சை இரண்டு பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சை ஒன்றாகும். மேற்படி பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் கோரப்படும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடங்கள் | பெற்றுக்கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த புள்ளிகளின் சதவீதம் | நேரம் |
|---|---|---|---|
| பொது விவேகப் பரீட்சை | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 100 | 40% | 2 மணித்தியாலம் |

*7.1.1 பாடத்திட்டம் :*

(i) பொது விவேகப் பரீட்சை.-
*விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனைத்திறன், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலைமை மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான கேள்விகளை உள்ளடக்கியது.*

(ii) தொழில்நுட்பம் தொடர்பான வினாப்பத்திரம்:

*கணிதம்* :
*திரிகோண கணிதம் (சமன்பாடுகள், முக்கோண அளவைகளைத் தீர்த்தல்) புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு) நிகழ்தகவு*

*பௌதீக விஞ்ஞானம் :*
ஒளி மற்றும் கண் பார்வையியல் (ஒளித்தெறிப்பு, ஒளி ஊடுருவல் : குவிவு, குழிவு ஆடிகள், திருசிய வில்லைகளின் கண்ணொளியியல் சூத்திரங்கள்)

*பல்வேறு தலைப்புக்கள் :*
புவியியல் அறிமுகம் (புவியின் வடிவம், புவியியல் பண்புகள் ஆகியன) திண்மப் பொருட்களின் கோணப் பார்வை மற்றும் ஒளிப்படங்களை பகுதிகளாக வேறாக்கல்.

*7.2 **பொதுவான நேர்முகப் பரீட்சை.-** தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.*

*8.0* **பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படல் :**

1. *மட்டுப்படுத்தப்பட்ட பரப்பின் அடிப்படையில் பயிலுநர் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவ நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால, தொழில்நுட்பக் கலை டிப்ளோமாப் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் மேற்படி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததாக வழங்கப்படும் சான்றிதழினை சமர்ப்பிப்பதன் ஊடாக தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.*

2. *பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தத் தவறும் பயிலுநர்களுக்கு ஆகக்கூடியது 06 மாத காலமளவு தமது பயிற்சிக் காலத்தினை நீடித்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத மட்டுப்படுத்தப்பட்ட பரப்பின் அடிப்படையில் விண்ணப்பித்துள்ள பயிலுநர்கள் அவர்களது முன்னைய பதவிக்கு விடுவிக்கப்படுவர்.*

3. *மட்டுப்படுத்தப்பட்ட பரப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களைப் பயிற்றுவிக்கும் தரத்தில் தான் முதலில் வகித்த சம்பள அளவுத்திட்டத்திலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டியதுடன், பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் வரை இலங்கை தொழிநுட்பவியலாளர் சேவையின் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தரத்தில் ஆரம்ப சம்பள ஏற்றத்திற்கு சமனான வருடாந்தக் கொடுப்பனவு ஒன்று சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும். பயிற்சிக் காலப்பகுதியினை திருப்திகரமாகக் கழிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் இரண்டாவது வருடத்தில், தான் அது வரை இருந்த சம்பள அளவுத்திட்டத்திலேயே ஆகக்கூடிய சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவார் என்பதுடன், கொடுப்பனவு தொடர்ந்தும் செலுத்தப்படும். பயிற்சியினை திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தி அடைந்ததன் பின்னர் 2000.03.02 ஆந் திகதிய மற்றும் 07/2000 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிரூபத்தின் மூலம் திருத்தப்பட்ட தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகும் வகையில் சம்பள மாற்றம் மேற்கொள்ளப்படும்.*

*9.0* ***விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் பூர்த்தி செய்தல்:-***

*(அ) மேற்படி அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய செ.மீ. 21× 29 (ஏ 4) அளவிலான தாள் ஒன்றின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை சுயமாகத் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 2 வரையான தலைப்புக்கள் 01 ஆம் பக்கத்திலும், இலக்கம் 03 தொடக்கம் 06 வரையிலான தலைப்புக்கள் 02 ஆம் பக்கத்திலும், இலக்கம் 07 தொடக்கம் 11 வரையான தலைப்புக்கள் 03 ஆம் பக்கத்திலும், உள்ளடங்குமாறு விண்ணப்பத்தினைத் தயாரித்தல் வேண்டும்.*

(ஆ) தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தினைத் தயாரிக்க வேண்டியதுடன் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் சரியான முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டு உள்ள பரீட்சையின் பெயரினை மேற்படி மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். நில அளவைகள் திணைக்களத்தில் தற்போது பணி புரியும் அலுவலகத்தின் மிகவும் நெருங்கிய மேற்பார்வை உத்தியோகத்தரினால் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**க. வே.** : பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கோரிய பரீட்சை நிலையத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. **விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்:-**

10.1 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி இல்லாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யாத குறைபாடுகளைக் கொண்டு காணப்படும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள விண்ணப்பப்படிவத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

10.2 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து உள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நில அளவையாளர் நாயகம் அவர்களினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளவதாகவோ கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

11.0 **பரீட்சைக் கட்டணங்கள்.**-பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். மேற்படி தொகையினை கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 என்ற இடத்தில் அமைந்துள்ள நில அளவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கும் அல்லது நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம்-தியதலாவ இற்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டு உள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதி ஒன்றினை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டுக்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.**-

(அ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2018.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நில அளவைகள் திணைக்களம்,
இல. 150, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

(ஆ) விண்ணப்பத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் " எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிக் தனது விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

* **க.வே.** 2018.09.10 ஆந் திகதியின் பின்னர் நில அளவைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

13.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் ஒருவர் தகைமை அற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுவதற்கு இடையில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையினை இரத்து செய்வதற்கு வாய்ப்புண்டு. சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்து உள்ள ஏதேனும் ஒரு தகவல் அது பொய்யானது என அறிந்தும் சமர்ப்பித்து உள்ளமை தொடர்பாகவோ அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தினை வேண்டுமென்றே மறைத்துள்ளமை தொடர்பாகவோ அறிய வருமாயின் அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

14.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்.**-

14.1 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும் பரீட்சார்த்தி தனக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

15.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு உள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

16.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின், அது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்கள் தீர்மானத்தினை மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டு உள்ள பொதுவான பரீட்சைச் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டுப்பட்டு உள்ளனர்.

பீ. எம். பீ. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2018, யூலை 26.

**அட்டவணை - 01**

**பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் நிலைய எண்கள்**

| தொடரிலக்கம் | நிலையம் | நிலைய எண்கள் |
|---|---|---|
| 01 | கொழும்பு | 01 |
| 02 | தியதலாவ | 02 |
| 03 | அநுராதபுரம் | 03 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

நில அளவைகள் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018**

Limited Competitive Examination for recruitment to the Post of Mapping Technical Officer (to the Training Grade) - 2018

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் :

(வர்த்தமான அறிவித்தலின் அட்டவணை இலக்கம் 01 இற்கமைய நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எதிர்பார்க்கும் நகரம் மற்றும் உரிய இலக்கம் என்பவற்றினை கூட்டினுள் குறிப்பிடவும்.)

1.0 1.1 முதல் எழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்):----.
(உதாரணம் : PERERA, A. B. C.) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

1.5 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி:

1.6 2018.09.10 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் : மாதங்கள்: நாட்கள்:

1.7 பால் (பெண்/ஆண்) : பெண் - 1
ஆண் - 2
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1.8 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : திருமணமானவர்
திருமணமாகாதவர்
(பொருத்தமான கூட்டில் "✓" என அடையாளம் இடுக.)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :----.

3.0 3.1 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.
3.3 கிராம அலுவலர் பிரிவு :----.

4.0 கல்வித் தகைமைகள் (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :----.

4.1 க. பொ. த. (சா. தரம்) பரீட்சை (முதலாவது அமர்வு) தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க. பொ. த. (சா. தரம்) பரீட்சை (இரண்டாவது அமர்வு) தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.0 5.1 அனுபவம் :----.
5.2 ஏனைய தகைமைகள் :----.

6.0 6.1 திணைக்கள சேவையில் இணைந்துகொண்ட பதவி மற்றும் திகதி :----.
6.2 ஊழியர் இலக்கம் :----.
6.3 மேற்படி பதவியில் சேவை நிரந்தரமாக்கப்பட்டு உள்ளதா? :----.
6.4 சேவைக் காலப்பகுதியில் ஒழுக்காற்றுத் தண்டனைகள் பெற்றுள்ளீரா? :----.
6.4.1 பதில் "ஆம்" எனின், அது தொடர்பான தகவல்கள் :----.
6.5 ஆரம்பப் பதவியின் பின்னர் வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு இருப்பின் அது தொடர்பான தகவல்கள் :----.

| பதவி | நியமனம் பெற்ற திகதி | சேவையின் நிரந்தர தன்மை |
|---|---|---|
| | | |

7.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டு உள்ளீரா? (உரிய கூட்டில் √ அடையாளம் இடுக.):

ஆம் ☐ இல்லை ☐

7.1 "ஆம்" எனின், விபரங்களைக் குறிப்பிடுக :----.

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்தப்பட்ட தொகை : ரூ. ----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினைதம் வசம் வைத்துக்கொள்ளவும்) |

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டு உள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிமொழிகின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியினை பூர்த்தி செய்யாமல் இருப்பதனால் மற்றும்/ அல்லது பிழையாகப் பூர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டத்தினை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும், இங்கு சகல பகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி உறுதிமொழி பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொருத்தமற்றவர் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளதனை நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதனை உறுதிமெழிகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டு உள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. 0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு. /திருமதி/செல்வி ........................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதனையும், அவர் ......................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும், நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையினையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

11.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை :

உத்தியோகத்தரின் பிரத்தியேக கோவை பரீட்சிக்கப்பட்டது. அவரினால் இங்கு இலக்கம் 06 மற்றும் 07 ஆம் தலைப்புக்களின் கீழ் வழங்கப்பட்டு உள்ள தகவல்கள் சரியானவை என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியில் இருந்து இந்த அலுவலரினை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

8-457/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.